**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**<u>ஆணை நாள்: 10.11.2020 (பிற்பகல்)</u>**

**<u>முன்னிலை</u>**

**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••••••

**<u>வழக்கு எண்.SA 5333/E/2019</u>**

திரு.என்.சீனிவாசன் ... மேல்முறையீட்டாளர்

/ எதிர் /

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
ஒசூர் வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 26.02.2019 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 07.06.2019 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 07.06.2019 |

******

**<u>ஆணை</u>**

தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்ட நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை செய்ய

இயலாததால் இன்று (10.11.2020) பிற்பகலில் தொலைபேசி மூலம் தொடர்புக் கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மேல்முறையீட்டாளர் திரு.என்.சீனிவாசன் அவர்கள் தனது சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான மனுவில் கைபேசி எண்ணை குறிப்பிடாததால், இவ்வாணையத்தால் அவரை தொலைபேசி மூலம் தொடர்புக் கொள்ள இயலவில்லை. பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி.அருள்மொழி, பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், ஒசூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் மட்டும் இன்றைய விசாரணையில் பங்கேற்றார்.

2. மேல்முறையீட்டாளர் 26.02.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் பொதுமக்கள் சார்பாக மேல்முறையீட்டாளர் 19.11.2018 தேதியிட்ட மனுவின் பேரில் புலத்தணிக்கை செய்யப்பட்டிருப்பின் அதன் விபரம், அம்மனுவின் பேரில் ஓடை மற்றும் நடைவழி பாதை ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டிருப்பின் அதன் விபரம், ஓடை மற்றும் நடைவழி பாதை ஆக்கிரமிப்பு செய்துள்ள நபர்கள் மீது நடவடிக்கை எடுத்திருப்பின், நடவடிக்கை விபரம், அம்மனுவின் பேரில் ஆக்கிரமிப்பு அகற்றப்பட வில்லையெனில் அதற்கான காரணம், அம்மனுவின் பேரில் நாளது தேதிவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனில், அதற்கான காரணம் உள்ளிட்ட 5 இனங்களில் தகவல்களைக் கோரி, பொதுத் தகவல் அலுவலர், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், ஒசூர் என விலாசமிட்டு தாக்கல் செய்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படாததால் மேல்முறையீட்டாளர் 07.06.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர் / உதவி இயக்குநர், நிலஅளவை மற்றும் பதிவேடுகள் துறை, மாவட்ட ஆட்சியரக வளாகம், கிருஷ்ணகிரி அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டாளருக்கு 03.05.2019 தேதியிட்ட கடிதம் வாயிலாக மேல்முறையீட்டு அலுவலரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. அதன்பிறகும் பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படாததால் பொது அதிகார அமைப்பினரால் தனக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்க உத்திரவிடுமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 07.06.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (10.11.2020) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இதுகுறித்து இன்றைய விசாரணையில் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஆஜரான பொதுத் தகவல் அலுவலரிடம் வினவியபோது, மேல்முறையீட்டாளருக்கு ஏற்கனவே தகவல் வழங்கப்பட்டு, மேல்முறையீட்டாளரும் பெற்றுக்கொண்டதாகக் கையொப்பமிட்ட 09.11.2020 ஆம் நாளிட்ட ஒப்புதலை (உரிய ஆவணங்களை) புலனம் (Whatapp) மூலம் ஆணையத்திற்கு சமர்ப்பித்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

6. ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மேல்முறையீட்டாளருக்குப் பொது அதிகார அமைப்பின் பராமரிப்பிலுள்ள ஆவணங்களின் அடிப்படையில் உரிய தகவல் வழங்கப்பட்டுள்ளதென்பது தெரிய வருகிறது. இதனை ஆணையம் பதிவு செய்து, இவ்வழக்கின்

மீது மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது.

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப்பதிவாளர்.**

**<u>வழக்கு எண்.SA 5333/E/2019</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு</u>**
பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
ஒசூர் வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்

**<u>மனுதாரர்</u>**
திரு.என்.சீனிவாசன்,
த/பெ.(லேட்) நாராயணப்பா,
எண்.1/77ஏ, அச்செட்டிப்பள்ளி கிராமம்,
ஒசூர் வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம் - 635 110.

Copy to: Judgement File.
*"VP / PA -12.11.2020"*